அங்காடி அமைக்க இயலாது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் கிராமங்கள் பூசலாங்குடியிலிருந்து அரை கிலோ மீட்டர் சுற்றளவுக்குள்ளாகவே இருக்கின்றன. எனவே, விதிமுறைகளின்படி எந்த நிபந்தனைகளும் பூர்த்தியாகவில்லை என்பதனால், பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 377, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

377—

போக்குவரத்துப் பணிமனை

***3529—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, போச்சம்பள்ளியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

ஒரு பணிமனை அமைக்கப்பட வேண்டுமென்றால், குறைந்தது 50 பேருந்துகள் இருக்க வேண்டும். போச்சம்பள்ளியில் தற்போது 17 பேருந்துகள்தான் இருக்கின்றன. பயணிகளின் அடர்வு அதிகரிக்கும்பட்சத்தில், பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியும். பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பணிமனை அமைப்பது பற்றி பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

முற்பகல் 10—55

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் தந்த அருட்கொடையே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) காலம் தந்த கருணைக் கடலே எங்கள் அம்மா, புண்ணிய பூமியில் புவியாளப் பிறந்த பூவினம் பெற்ற புரட்சித் தாய் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அன்னைத் தமிழ்த்தாயின் அருந்தவப் புதல்வியே எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நம் தாய்த் திருநாட்டின் தனிப் பெரும் தலைவியே எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) தருமத்தாயின் தலைமகளாம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தைக் காத்த காவியத் தலைவியே எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) களம் பல கண்டு வெற்றிகள் பல ஏந்தி . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அன்னைத் தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வியே எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா தங்கள் பொற்பாதம் பணிகிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளியில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தர மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மேலும், சேலம், திருப்பத்தூர், வாணியம்பாடி சாலை என்பது நீண்ட நெடிய காலமாக இருவழிச் சாலையாகவே இருந்து வருகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, உரையை சுருக்கமாக முடியுங்கள்.

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போச்சம்பள்ளியில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் வெறும் 10 பணிமனைகள் மட்டுமே அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆண்ட இந்த 4½ ஆண்டு காலத்தில்தான் 74 பணிமனைகள் அமைக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய போச்சம்பள்ளியில் பேருந்துகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற காரணத்தினால்தான் வருங்காலங்களில் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்று சொன்னேன். பக்கத்தில் இருக்கக்கூடிய திருப்பத்தூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி, தருமபுரியில் பணிமனைகள் இருக்கின்றன. குறைந்தபட்சம் 100 பேருந்துகள் இருந்தால்தான் அந்தப் பணிமனையினைப் பிரித்து புதிய பணிமனையினை உருவாக்க முடியும். அந்தவகையில் அங்கு 17 பேருந்துகள் இருக்கின்ற காரணத்தினால், எதிர்காலத்தில் பேருந்துகளின் எண்ணிக்கையும், பயணிகளின் அடர்வும் அதிகரிக்கின்ற பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 378, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.